# மக்களிடம் விழிப்புணர்வு இல்லை என்றால் எந்த ஒரு திட்டமும் மேம்பாடு அடைய முடியாது

## பெண்களுக்கான பயிற்சியில் மத்திய அரசு அதிகாரி தகவல்

**தூத்துக்குடி, டிச. 18-**

மக்களிடம் விழிப்புணர்வு இருந்தால் தான் எந்த ஒரு திட்டமும் மேம்பாடு அடைய முடியும் என்று தூத்துக்குடியில் நடந்த பெண்களுக்கான இலவச பயிற்சியை துவக்கி வைத்த மத்திய அரசு அதிகாரி சதீஷ் தெரிவித்தார்.

மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் சிறப்பு திட்டம் மூலம் தமிழகத்தில் தூத்துக்குடி மற்றும் தர்மபுரி மாவட்டங்களை பின்தங்கிய மாவட்டமாக தேர்வு செய்துள்ளது. இதனால் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பெண்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளித்து அந்த பயிற்சியின் மூலம் அவர்களுக்கு பல்வேறு திறன்களை வளர்க்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட நேருயுவகேந்திரா அமைப்பு சார்பில் எட்டயபுரம் ரோட்டில் உள்ள இண்டியன் இன்ஸ்டியூட் ஆப் பாராமெட்டிக்கல் சயின்ஸ் நிறுவனத்தில் 30 பெண்களுக்கான பயிற்சி துவக்க விழாநடந்தது இதில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி நேருயுவ கேந்திரா சோனல் டைரக்டர் சதீஷ் தலைமை வகித்தார். ராஜகோபால் வரவேற்றார். தூத்துக்குடி மாவட்ட அமைப்பாளர் மதிவாணன் பேசினார். தொடர்ந்து எஸ்.ஏ.வி பள்ளி உடற்கல்வி இயக்குனர் குப்புசாமி, இண்டியன் இன்ஸ்டியூட் ஆப் பாராமெடிக்கல் டைரக்டர் கீதா ஆகியோர் பேசினர். நேருயுவ கேந்திரா அருண்குமார் நன்றி கூறினார். முன்னதாக தமிழ்நாடு சோன் மண்டல இயக்குனர் சதீஷ், மதிவாணன் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது;

தூத்துக்குடி மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக மத்திய அரசு தேர்வு செய்து இங்குள்ள பெண்களுக்கு பல்வேறு பயிற்சிகளை இலவசமாக அளிக்க உத்தரவிட்டது. இதன்படி இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதில் மாவட்டம் முழுவதும் இருந்து 41 பேர் விண்ணப்பித்தனர். இதில் 30 பேர் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு ஒரு மாத காலம் அழகுகலை பயிற்சி, கவரிங் நகைகள் செய்யும் பயிற்சி, சேலைகளில் டிசைன் போடும் பயிற்சி போன்ற பயிற்சிகள் வல்லுனர்களால் அளிக்கப்படுகிறது. இது தவிர இந்த பெண்களுக்கு தலைமை மற்றும் ஆளுமைப்பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழில்துவக்குவதற்கு கடன் உதவி பெற அதிகாரிகளை அணுகுவது எப்படி, ஒரு அதிகாரியை சந்திக்க செல்லும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறை உள்ளிட்ட அனைத்து விஷயங்களும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இதுபோன்று கற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்கள் பெற்ற பயிற்சியின் மூலம் அவர்கள் நல்ல முறையில் தொழில் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும். இந்த பயிற்சியை பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படுகிறது. இந்த பயிற்சியில் எஸ்.சி, எஸ்.டி பிரிவினருக்கு 50 சதவீதம் ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பயிற்சி அளிக்க எவ்வளவோ விழிப்புணர்வு அளித்தும் இலவசமாக பயிற்சிபெறக்கூட மக்கள் ஆர்வமாக முன்வரவில்லை. தமிழகத்தில் மட்டும் இதுபோன்ற நிலை இல்லை. இந்தியாவில் தேர்வு செய்யப்பட்ட பின் தங்கிய மாவட்டங்கள் அனைத்திலும் இதுபோன்ற நிலை தான் உள்ளது.

எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் மக்களிடம் விழிப்புணர்வு இருந்தால் தான் அந்த திட்டம் மேம்பாடு அடையும். மக்களிடம் ஆர்வம் இருந்தால் அரசு அதற்கு உதவி அளித்து திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த முடியும்.

மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி இதுபோன்ற திட்டங்கள் மூலம் மக்களின் பொருளாதார வளர்ச்சியையும், வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்கிற நோக்கத்திற்காக அரசு செயல்படுத்துகிறது. இதனை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். பெண்களுக்கான இப்பயிற்சி ஒரு மாதம் நடக்கிறது. இதில் கல்லூரி பேராசிரியர்கள், அரசுத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் மூலமும் அவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

Dinamalar - 18/12/14